உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு — பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஆு (1889) ஆவணிமீ 28-ம் உ — அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். — தொலைபேசி: 356

புத்-அஎ] யாழ்ப்பாணம்: இராக்ஷத ஆு ஆடி மீ உ-உ வெள்ளிக்கிழமை (18-7-1975) [இலை: கரு

## நாடும் நகரும் காடும் நற்றிருக் கோயிலும் தினமும் தேடித் தேடிக் கும்பிடும்

# சிவனடியார்கள் திருக்கூட்டம்

## திருக்கேதீச்சுவரம் செல்லும் பாத நடைத் தொண்டர் பணி



[ திருஞானசம்பந்தர் பாதயாத்திரைச் சபையினர் நல்லை முருகப்பெருமான் சந்நிதியில் வழிபாட்டுடன் நாளை பிற்பகல் ( 19-7-75 ) நல்லூர் - கேதீச்சரம் பஜனைப் பாதயாத்திரையை ஆரம்பிக்கின்றனர். இந்த யாத்திரைச் செல்வர்கள் தங்களது 19-ஆவது ஆண்டாக நிகழும் யாத்திரையின்போது வழங்குதற்கென சிவநெறிச் சீலர் - திருநீற்றன்பர் காங்கேசனுர் ஞாபகார்த்த சிறப்பிதழாக வெளியிட்டுள்ள அறிக்கையைத் தருவதில் மகிழ்வுறுகின்றோம். கால் நடை யாத்திரை வழிபாட்டின்பம் இதில் கலந்து குழைந்தோரே அறிவர். சிவதொண்டு வாழ்க ப-ர்.

"வையகமுந் துயர் தீர்கவே" — தேவாரம்

[ இக் கட்டுரை "லங்காபுரி சிவதொண்டர்கள்" என்ற கட்டுரைத் தொகுதியிலிருந்து எடுக்கப்பட்டது. மானவர்மன் என்பவன் ஓர் இலங்கை அரசன். 7-ஆம் நூற்றாண்டு காலத்தவன். அவன் தன் யானைப் படைத் தலைவன் குஞ்சரமல்லன் முத்தரையனுடன் காஞ்சியில் தங்கியிருக்கின்றான். காஞ்சியிலிருந்து அரசாண்ட மாமல்லனுக்கு அவன் உற்ற நண்பன். காஞ்சியரசனின் அன்பின்காரணமாகத்தான் இலங்கை அரசனும் குஞ்சரமல்லனும் அந்த பல வருடங்கள் அன்னியோன்யச் சிறப்புடன் வாழ்ந்து வந்தனர். அவர்கள் காஞ்சியில் தங்கி இருந்த காலத்தில், திருநாவுக்கரசு சுவாமிகளின் அணுமலை - காஞ்சி, சிவதல யாத்திரைப் பேரெழுச்சி நடைபெறுகிறது. அந்தப் பேரெழுச்சியைத் தரிசிக்கும் பெரும்பேறு பெற்றவர்கள் இந்த லங்காபுரி வாசிகள் இருவரும். அதனால் எங்கள் இலங்கை அன்பர்கள் கொஞ்சம் ஆறுதலாக இருந்து சரித்திரக் கண்கொண்டு இக் கட்டுரையை அவதானத்துடன் படித்துப் பயன் பெற வேண்டும் என விரும்புகின்றோம், ]

நாடு நகரமும் நற்றிருக் கோயிலுந்
தேடித் திரிந்து சிவபெருமான் என்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே,

—திருமந்திரம்

கால் நடையாக நடந்து சிவஸ்தல யாத்திரை செய்பவர்கள் புண்ணியவான்கள். இயற்கையையும் இயற்கையின் கர்த்தாவாகிய இறைவனையும் ஒருங்கே கண்டு களிகூர விரும்புவோர்க்கும், சத்திய சமரச சன்மார்க்க இன்பநிலையை உணர முயலுவோர்க்கும் கால்நடை யாத்திரை போன்ற உயர்ந்த சமயசஞ்சீவியோ, மஹாயக்ஞமோ பிறிதில்லை. அதுவும் வெண்பனி படர்ந்த கயிலாய பூமியிலிருந்து பொழில்களும் எழில்களும் ஆர்ந்த இமயத்திற்கு நடந்து செல்லும் யாத்திரா மார்க்கத்திற்கு உவமையாகக் கூறுவதற்கு இவ்வுலகின் கண்ணே ஒன்றுமில்லை. அதே போல

( வளர்ச்சி 3ம் பக்கம் )

## நல்லூரில் கதிர்காம விழா

நல்லூர் கந்தசுவாமி கோயிலில் கதிர்காமத்திருவிழா 9-7-75 முதல் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இவ்விழா 26-7-75 அன்று நிறைவுறும். — —

### மல்லாகத்தில்
## கந்தபுராணப் படிப்பு

சில ஆண்டுகளுக்கு முன் யோகசுவாமிகள் ஒவ்வொரு முருகப்பெருமானின் ஆலயத்திலும் கந்தபுராணம் படிக்க வேண்டுமென்று விரும்பினர். அவ்வண்ணம் சென்ற ஆறு ஆண்டுகளாக இந்து சமய விருத்திச் சங்க ஆதாவில் மல்லாகம் பழம்பிள்ளையார் கோயிலின் அண்மையிலுள்ள முருகமூர்த்தி சந்நிதானத்தில் கந்தபுராணப் படிப்பு நடைபெற்று வருகின்றது. இவ்வாண்டு சென்ற இரு மாதங்களாகக் கந்தபுராணப் படிப்பு நடைபெற்று வருகின்றது. 23-7-75 புதன்கிழமை 'வள்ளியம்மை திருமணப் படலம்" புராண படனமும், அபிடேகமும், பூர்த்தி விழாவும் ஆலயத்தில் சிறப்பாய் நடைபெறும். விவாகப் பதிவுகாரரும் தொண்டர்சபைக் காரியதரிசியுமாகிய திரு. வி. சபாரத்தினம் அவர்கள் ஆண்டுதோறும் தனது செலவில் விழாவை நடத்தி வருகின்றார்.

## சிரமதானப் பணி

நீராவியடி வண்-வடகிழக்குச் சன சமூக நிலைய வெள்ளி விழா நினைவாக நீராவியடிக் கேணியை 20-7-75 காலை 6-30 மணிமுதல் ஆழமாக்கிச் சுத்தம் செய்யும் பணியை மேற்படி நிலையத்தினர் முன்னின்று நடாத்துவர், சிரமதான முறையில் நிகழும் இத் தொண்டினை யாழ் இந்துக் கல்லூரி அதிபர் திரு. இ. சபாலிங்கம் அவர்கள் தொடக்கிவைப்பார்

## நாவலரும் கோயிலும்

தொகுத்து அளித்தவர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்.
[ எழுதி உதவியவர் சி. சீவரத்தினம். ]

### (3) கோயில் அதிகாரி (முன் வளர்ச்சி — 15)

தேவாலயக் கிரியைகள் சிரத்தையோடு விதிப்படி செய்யப் செய்யப்படா தொழியின், உலகத்திலே மழையின்மையும், பஞ்சமும், மசூரிகை, விஷூசி முதலிய கொடு நோய்களும்; கன்னம் கொலை, களவு, கொலை முதலிய தீத்தொழில்களுமே விருத்தியாகும்;

ஆதலினலே கோயிலதிகாரிகள் தேவாலயங்களைச் சிரத்தையோடு விதிப்படி சாவதானமாக நடத்தல் வேண்டும்,

நல்லொழுக்கமும் பத்தியும் ஆகமவுணர்ச்சியும் உடைய பெரியோர்கள் கோயிலதிகாரிகளாய் இருப்பார்களாயின், அவர்கள், பழி பாவங்கட்குப் பயந்து, தேவாலயத்தைச் சிரத்தையோடு விதிப்படி நடாத்திச் சமய பத்தியை வளர்ப்பார்கள்.

வளர்ச்சி 2-ம் பக்கம்

# கட்டறுத்தெமையாளக் கண்ணூ நீரிட்ட அன்பர்கள்

## கழகம் கலந்து பரமன் கழலடிகண்ட மணிவாசகர் மணிவாக்குச் சிறப்பு

### சபைத் தலைவரின் சொற்பொழிவின் சாரம்

சபை நாவலர் மண்டபத்தில் 12-7-75 சனிக்கிழமை மாலை 6 மணியளவில் மேற்படி விழா சபைத் தலைவர் திரு. த, சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் ஆரம்பமாகி நடைபெற்றது. திரு. பரமநாதன் அவர்களும் சங்கீதபூஷணம் திரு. இ. நடராசா அவர்களும் திருமுறை ஓதினர்கள்.

"கட்டறுத் தெனை யாண்டு
கண்ணூ நீ
ரிட்டவன்ப ரொடியா
வருங் காணவே
பட்டி மண்டப மேற்றினை
யேற்றினை
யெட்டி னோடிரண்டும்
மறியேனையே".

இத்திருவாசக செய்யுளை சபையோருக்கு நினவூட்ட விரும்புகின்றேன், பாசபந்தத்தை நீக்கி என்னை ஆட்கொண்டாய். அதுமட்டு மன்று திருநீறு பூசிய உன்து மெய்யன்பர்கள் பரந்து இருக்கும் திருவோலக்க மண்டபத்தில் என்னை சேரவைத்தால். அ+உ=ஓ அ+உ= =ய ஓங்காரமாகிய பிரணவத்தையும் யகரமாகிய ஆன்மாவையும் அறியாத என்னை மெய்ஞானிகளுடைய கூட்டத்தில் சேர்ப்பித்தாய் என்பது குறிப்பு. இவ்வாறு மணிவாசகப் பெருமானுடைய அநுபூதியை தலைவர் திரு. த. சோமசுந்தரம் அவர்கள் விளக்கினர்கள்.

மாணிக்க வாசக சுவாமிகள் திருவாதவூரில் அமர்த்திய பிராமண குலத்தில் திரு அவதாரஞ் செய்தார். தலமணமும். சிவமணமும் திருநீற்றின் தண்மணமும் உண்டாக கல்விபயின்றார். அதனால் 15ம் வயதளவில் சகல கலைகளையும கற்றுணர்ந்தார். அரிமர்த்தன பாண்டியன் அவருடைய பெருமையை உணர்ந்து அவரை முதன் மந்திரியாக்கினன். அரசனுக்கு குதிரை வாங்கும்

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

நேயர்கள் நெஞ்சம்

# ஆடி அமாவாசை பாடசாலைத்தினம்

### சைவப் பிள்ளைகளுக்குப் பெரும் இடர்

ஐயா,

6-ஆம், 7-ஆம் 8-ஆம் வகுப்புகளுக்கு மதிப்பீட்டுப் பரீட்சை நடாததும் கல்வித் திணைக்களம் அதற்குரிய நேர சூசிகையில் ஆடி அமாவாசைத் தினமான வரும 7-8-75 திகதி வியாழக்கிழமையும் வேலை நாளாகக் கணித்துள்ளது. இது அரசாங்க விடுமுறை அல்ல ஆயினும் எல்லாச் சைவப் பாடசாலைகளும் அன்று மூடப்பட்டிருப்பதும், ஆசிரியர் மாணவர்களில் பலர் அன்று நோன்பு அனுட்டிப்பதும் காலாகாலமாக இருந்து வரும வழக்கமாகும். இதைப் புறக்கணித்து இப்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை சைவ சமயத்தவரின் மனத்தைப் புண்படுத்துவதாக இருக்கிறது, சைவப் பெற்றோர் இதுபற்றிப் பெரிதும் கவலை அடைந்துள்ளனர், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதைப்பற்றி உடனடியாக நடவடிக்கை எடுத்து இத் தேதியைப் பின் போடும்படி வற்புறுத்துவது சைவ மக்கள் எல்லோரதும் கடமையாகும்,

"சைவாபிமானி"
யாழ்ப்பாணம், 12-7-75.

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர்தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

இராக்ஷத வூ ஆடி மீ உ-உ வெள்ளி

## 'சிவநடனம்' திரைக்காட்சிக்கு மூல கர்த்தா

### கலாயோகி ஆனந்த குமாரசுவாமி

திரைப் படத்திலே வாழ்க்கைக்கு வேண்டிய கலாச்சாரக் கலின் பொருந்திய வரலாற்றை அமைப்பதின் சிறப்பை இந் நாட்டு மக்களுக்கு அமெரிக்கத் தூதரகம் 'சிவ நடனம்' என்ற காட்சி மூலம் விளங்க வைத்திருக்கின்றது.

'பொஸ்ரன்' மாநகரத்தில் நுண்கலைக் கழகத்து அதிபராகப் பல்லாண்டுகளாக மதி நுட்பத்தாலும் மத நுண்ணறிவாலும் சிற்பக்கலைத் தேர்ச்சியினாலும் அரும் பெருஞ் சாதனை புரிந்து உலகப் புகழுக்குரித்தான கலாயோகி அவர்கள் தமிழகத்தின் தலைசிறந்த பேரறிஞர்களிற் பெயர் பெற்றவர்.

பதினைந்தாண்டுகளுக்கு முன் நாம் அமெரிக்கக் கல்விக் கழகத்தின் அழைப்பின் பேரில் மூன்றுமாத காலம் அந்நாட்டிற் சுற்றுப் பயணம் செய்தபொழுது பொஸ்ரன் மாநகரில் உள்ள நுண்கலைக் கழகத்திற்குச் சென்று கலாயோகியின் கலைப் பணிச் சிறப்பை நேரிற் கண்டு களித்தோம்; களி பேருவகையுற்றோம். அப்பொழுது அந் நகரில் வசித்து வந்த அவரது பாரியாரையும் பார்க்கும் அரிய சந்தர்ப்பம் கிடைத்தது. நாம் சென்ற அவ்வேளையிலே திருமதி ஆனந்த குமாரசுவாமி அம்மையார் கலாயோகியின் நூலகத்தின் மத்தியில் வீற்றிருந்து அதுவரை அச்சேற்றப் பெறாத கைப்பிரதிகளைத் தட்டெழுத்திலே தயாரித்துக்கொண்டிருந்தனர். இலங்கையிலிருந்து சென்றவரை இன்முகத்துடன் வரவேற்றுக் கலாயோகியின் விலை மதிப்புக்கப்பாலான பெருநூல்களையெல்லாம் குறிப்பிட்டுக் காட்டினர். இருக்கு - வேத ஆங்கில நூல்களை அங்குதான் முதன்முதலாககாணும் பெரும் பாக்கியம் எமக்குக் கிட்டியது.

"சிவ நடனம்" என்ற அரிய தொகுப்புப் பிரதியை எமக்கு அன்பளித்துத் தமிழக மக்கள் இப் பணியைத் தொடர்ந்து செய்தல்வேண்டும் என்று அறிவுரை கூறினர். பல ஆண்டுகளுக்குப் பின் இப்பொழுது இலங்கை மக்கள் சிவநடனத் திரைக் காட்சியைக் காணும் பேற்றைப் பெற உதவிய அமெரிக்க தூதரகத்தின் நற்பணி போற்றற்குரியது.

இத்திரைத் தொகுப்புப் பிரதியை மக்கள் பார்வையிடத் தக்க வசதிகளைத் திரைப்படக் கூட்டுத்தாபனம் செய்துதவ வேண்டும் என்னும் ஒரு கோரிக்கை இப்போது எங்கும் எழுந்துள்ளது. இத்தொடர்பில் பல நேயர்களதும் சங்கங்களதும் கடிதங்கள் நமக்கு வந்துள்ளன. இதுபற்றி உரிய அதிகாரிகள் வேண்டிய நடவடிக்கை எடுத்துதவுதல் நன்று.

x x x

## மண் வெளியில் மாறு - விண் வெளியிலோ வேறு!

மண் அகழ்ந்த மாலும் விண் அளந்த அயனும் கண்ட உண்மை ஒன்று இப்பொழுது எண்ணத்திற்கு வருகின்றது. ஆழி சூழ் அவனியில் யார் வலியர் என்று கட்சிப் போர் தொடர்ந்து வரும் அமெரிக்கரும் உருசியரும் மேலை வானிடைப் பறந்தும் வீரம் கூறி இதுகாறும் வந்திருக்கின்றனர். சதுரர் யார் என்பது அவர்களுக்குச் சற்றேனும் புரியவில்லை! இவர்கள் இரு பகுதியினரும் இவ்வாறு ஏட்டிக்குப் போட்டியாக இருப்பதனால் ஏனைய நாட்டினரும் ஏதோ ஒரு பக்கம் சார்ந்து அனைத்துலகத்தையு கட்சி வேறுபாட்டுக் கூறுகளாக்கி யிருக்கின்றனர். இந்த நிலைமை நீடிக்குமேயானால் மனித குலம் அவலமாய் அலைந்து போகும். ஆனால் இதற்கிடையிலே விண்ணில் ஓர் வெளிச்சம் மக்களின் இதயத்தில் நம்பிக்கையை எழுப்பும் வகையிலே தோன்றியிருக்கின்றமை எதிர்காலப்போக்குக்குப் புதிராத அமையுமென்று விளக்குகின்றது, அமெரிக்க அப்பொலோவும் உருசிய சோயுசும் வளி மண்டலத்துக்கப்பால் ஒருங்கிணைந்து ஒப்பற்ற சாதனையை உலகம் வியக்க அமைத்தமை பலவேறு வழிகளில் மனித வாழ்க்கைக்கு இனிமையான புதுப் பாதையை உண்டாக்கும் என்பதற் கையமின்று.

நட்புக் கரம் நீட்டிக் கை குலுக்கும் இவ்வைபவம் மனித சஞ்சாரத்துக்கப்பால நிகழ்ந்ததெனினும் பூவுலகிலுள்ளோர் புளகாங்கிதங் கொள்ளத் தொலைக் காட்சி உதவி யிருக்கின்றது வடதுருவமும் தென் அருவமும் இடம் பெயர்ந்தோரிடத்திலே தொடுகின்ற அபூர்வக் காட்சி வாழ்க்கைக் குறிக்கோளாகும் புதியதோர் பொழிப்பைப் புலப்படுத்துவதாகும்,

உ

## சைவ பரிபாலன சபை

### உறுப்பினர்கட்கு ஓர் அறிவித்தல்.

சபை உறுப்பினர் சந்தா பாக்கிகளை செலுத்தும் தேதி 31-7-75 ஆக பின் போடப் பட்டுள்ளது. உறுப்பினர்கள் இத் தேதிக்கு முன்னர் தங்கள் சந்தாவை செலுத்திவிடும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

சைவபரிபாலன சபை, யாழ்ப்பாணம், 9-7-75.

வை. இரகுநாதமுதலியார், கௌரவ செயலாளர்.

## நாவலரும் - கோயிலும்

( 1 ஆம் பக்கத்து வளர்ச்சி )

இவ் வியல்பில்லாதவர்கள் கோயிலதிகாரிகளாய் இருப்பார்களாயின், அவர்கள் தேவத் திரவியங்களைப் பெரும்பான்மையும் இடம்பதத்தின் பொருட்டும், தங்கள் குடும்பப் பாதுகாப்பின் பொருட்டும், பொதுப் பெண்களின் பொருட்டும், வழக்கின் பொருட்டும், அதிகாரிகளை உபசரித்தல்பொருட்டும், அவர்களுக்குக் கொடுக்கும் பரிதானத்தின் போருட்டுமேசெலவு செய்வார்கள்.

தேவாலயத்தை ஈசுரபத்தி வளர்த்தற்குச் சிறிதும் இடமாக்காது. காமம் குரோதம் மதம் மாற்சரியம் சண்டை கொலை முதலியவை வளர்தற்கே இடமாக்கி விடுவார்கள்.

அவர்கள் தேவத் திரவியத்தைச் சிறுபான்மை தேவாலயக் கிரியைகளிற் செலவு செய்யினும், அக் கிரியைகள் இவை யென்றும், அவைகளைச் செய்தற்கு யோக்கியராவார் இவர் என்பதும், அம் முறைப்படி செய்யா தொழியின் விளையுங் கேடு இது என்பதும், அறியும் அறிவு இல்லாமையினாலே அவைகளைக் கிரமப்படி செய்விக்கமாட்டார்கள். ஆகையால், அச் செலவினாற் சிறிதும் பயனே இல்லை.

ஆதலினாலே, தேவாலயங்களை நல்லொழுக்கமும் பத்தியும் ஆகமவுணர்ச்சியுமுடைய பெரியோர்களிடத்திலேயே ஒப்பித்தல் வேண்டும்.

கோயிலதிகாரிகள் தங்களுக்கு உரிய கடமையிலே தவறினர்களாயின், அரசன் அவர்களைத் தண்டித்து நீக்கிவிடல்வேண்டும். அரசன் அப்படிச் செய்யாவிடத்து, உலகத்தார் பலரும் ஒற்றுமை யுடையவர்களாய்த் திரண்டு, அரசனுக்கு விண்ணப்பஞ் செய்து, அவ்வதிகாரிகளை நீக்குவிக்க முயலல் வேண்டும். இப்படிச் செய்யாதவர்கள் நரகத்துக்கு இலக்காகி எண்ணில்காலம் வருந்துவார்கள். (வளரும்)

## கடமையைக் கருத்துடன் நடத்திய கண்ணியவான்

### சிவ. முத்துக்குமாரசுவாமி

வேலைக்கைப் பிள்ளையார் கோவிற் பரிபாலனத்தைத் தனது சீவிய வேலையாகக் கொண்ட சைவசீலர் சிவக்கொழுந்து முதலியார் முத்துக்குமாரசுவாமி அவர்கள் மானிப்பாய் மாநகரத்துக்கு மாணிக்கமாய் விளங்கினர்.

விவாகப்பதிவாளர் பதவியிலிருந்து ஊர் மக்களுடன் பலகாலும் பழகிய பண்பைத் துணையாகக்கொண்டு வலிகாமம் மேற்குப் பகுதியிற் சமயப்பணியைச் சிறப்புறச் செய்து மக்களின் மதிப்பைப்பெற்றவர் முத்துக்குமாரசுவாமி அவர்கள்.

மானிப்பாய் மகளிர் இந்துக் கல்லூரி நிறுவ முன்னின்று முயற்சித்தவர்களில் முக்கியமானவர் இப்பெரியார்.

இந்துக் கல்லூரி (மானிப்பாய்)ப் பழைய மாணவர் சங்கப் பொருளாளராகத் தொடர்ந்து தொண்டாற்றியும் வலிகாமம் மேற்கு கூட்டுறவுச் சங்கத் தலைவராகவும் பணி புரிந்து அருங்கடமைச் சீலராக இலங்கிய சிவ. முத்துக்குமாரசுவாமி யவர்கள் தமது 65-ம் வயதில் இவ்வுலக வாழ்வு நீத்தனர்.

சைவபரிபாலன சபை உபதலைவருள் ஒருவராகிய சட்டத்தரணி திரு. சிவ. இராஜேந்திரம் அவர்களின் உடன் பிறந்தார் சிவ. முத்துக்குமாரசுவாமி அவர்கள் சமய சமூகத் தொண்டராய் வாழ்நாளைத் தவப் பயனென்று கருதி நல்லவண்ணம் வாழ்ந்தனர். அவர்கள் தரும வாழ்க்கையின் குறிக்கோள் எடுத்துக்காட்டாக இலங்கட்டும். ——

## பப்பா மரத்தைப் பயிரிடுவோம்

வருடம் முழுவதும் ஏழை பணக்காரர் எல்லோருக்கும் ஏற்ற பழம் உணவுச் சத்துக்கள் நிறையவுள்ள பப்பா உடம்புக்கு உறுதிதருவதோடு உட லுறுப்புக்கள் எல்லாவற்றிற்கும்உபயோகமானது. விலையுயர்ந்த பழங்களிற் பார்க்கப் பப்பா சத்து கூடியது. அது எந்த நிலத்திலும் எல்லாப் பருவகாலத்திலும் பலன்தருவது அதை நாங்கள் இயன்றளவு வீட்டு வளவுகளிலும் தோட்ட நிலங்களிலும், வெறுங்காணிகளிலும் பயிரிடுவோமாக.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டில்

வழக்கு இல: MB 14028

சின்னையா ஞானச்சந்திரமூர்த்தி, சுழிபுரம் -வழக்காளி,

எதிராக

(1) முத்து கந்தையாவும்
(2) பெண் இரத்தினமும் — இருவரும் தொல்புரம் சந்தையடி. தொல்புரம்

எதிராளிகள்

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டின் MB / 14028-ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப் படும் இரண்டு துண்டுக் காணிகளும் 1975-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 9-ஆம் திகதி (9-9-75) செவ்வாய்க்கிழமை முற் பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை :- மேற்குறித்த எதிராளிகள் குறித்த வழக்காளிக்கு ரூபா 1925/-ஐயும் மேலும் முதல் ரூபா 1500/-க்கு வருட மொன்றிக்கு நூற்றுக்கு 10 வீதம் 17-8-73-ம திகதியிலிருந்து 13-12-74-ம் திகதிவரைக்கும் வட்டியையும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கப் படும வரை சட்ட வட்டியுமான வருட மொன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும் வழக்கு செலவு ரூபா 431/50 ம் கொடுபட வேண்டி யிருப்பதாலும், தீர்வைத் தொகையில் ரூபா 500 கழிக்கப் படவேண்டும்.

### ஆதன விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு சங்கானைக் கோவிற்பற்று தொல்புரம் இறை "கணைக்கவட்டியும் திருகைவளவும்:" பரப்பு நிலை இலாச்சம் (2) இரண்டும் குழி (8 1/4) எட்டேகாலும் ஆனல் அளவினட்டி பரப்பு நிலை இலா (2) இரண்டு குழி (9 ஒன்பதும் கிணற்றில் பங்கும், எல்லை கிழக்கு முருகேசு காசிநாதருக்குரிய ஆதனம வடக்கு ஆளவான் நன்னியினுதனம, மேற்கு ஆறுமுகம் பெண் செல்லாச்சியினுரித்தாளரினுதனம், தெற்கு கைஒழுங்கை இது அடங்கலும்:

(2) மேற்படி இறை 'ஒல்லைத் தலைவாசல்" பரப்பு நிலை இலா (1) ஒன்றும் குழி (8) எட்டும் இதில தெற்குப் பககமாகப் நில இலா (½) அரையும், வான் பயிர் செய்பயிர்களும், கிணற்றில் பங்கும் இதற்கு எல்லை கிழக்கு சின்னவி முருகேசுவுக்கும் பெண் இலட்சுமிபபிள்ளைக்கும் உரிய ஆதனம வடக்கு செல்லப்பா கைபெண் பிள்ளச்சியின் இதனமிகுதி ஆதனம், மேற்கு ஒழுங்கை தெற்கு முத்தர் பெண நாகமுத்துவுக்குரிய ஆதனம். இதடங்கலும்.

சி. செ. பாலசிங்கம்
கொமிஷனரும் விலை மதிப்பாளரும்

அராலி வடக்கு வட்டுக்கோட்டை.

7-7-75 47, 11.7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேக்கிழார் விழாத் தலைமை உரை

## திருமுறைச் சிறப்புப்பற்றி

### திரு. இ. சபாலிங்கம் அவர்களின் சிந்தனை

(முன் வளர்ச்சி -2)

பெரியபுராணத்திலே பல அற்புதங்களை கூறுகிறார் சேக்கிழார், அந்த அற்புதங்களுக்கு எல்லாம் திருமுறைகளில் அகச் சான்றுகள் உண்டு. திருஞானசம்பந்த பெருமான் மூன்று வயதிலே ஞானப்பாலை உண்டு, சிவனடியே சிந்திக்கும் திருப் பெருகு சிவஞானம் கைவரப் பெற்றார், என்று சேக்கிழார் பாடுகிறார். அந்த அற்புதச் செயலைச் சம்பந்தப் பெருமானே பாடியிருக்கிறார்.

"போதையார் பொற் கிண்ணத்தடிசில் பொல்லா தெனத்
தாதையார் முனிவுறத் தானெனை ஆண்டவன்'

என்று, அகச் சான்று சம்பந்தர் தேவாரத்திலே காணப் படுகிறது. அப்பர் சுவாமிகள் ஒரு பொய்கையிலே மூழ்கி திருவையாற்றிலே எழுந்து திருக்கைலாசக் காட்சியைக் கண்ட அற்புதத்தை

"யாதஞ் சுவடு படாமல் ஐயாறு அடைகின்றபோது;
காதன் மடப்பிடி யோடும் களிறு வருவென கண்டேன்
கண்டேன் அவர்திருபாதம் கண்டறியாதென கண்டேன்"

என்று பாடியிருக்கிறார்.

சுந்தரமூர்த்தி சுவசமிகள் இறைவன் தன்னைத் தடுத்தாட்கொண்ட செய்தியை,

"அன்று வந்தெனை அகலிடத்தவர் முன்
ஆளதாக என்று வணங்காட்டி
நின்று வெண்ணெய் நல்லூர் மிசை ஒளித்த
நித்திலத்திரன் கொத்தினை"

என்று கூறுகின்றார்.

இப்படியாக அடியார்களின் அற்புதங்களுக் கெல்லாம் அகச் சான்றுகள் தேவாரத்தில் காணப்படுகின்றன. (வளரும்,

# நாடும் நகரும் காடும்...

(1- ஆம் பக்கத்து வளர்ச்சி)

தட்சிண பூமியிலே, திருவண்ணுமலையிலிருந்து காஞ்சிமா நகர்க்கு செல்லும் நடை யாத்திரை மார்க்கத்திற்கு இணையான இன்பமார்க்கம் பிறிதில்லை. நிலம் என்ன, நீர் என்ன, காடென்ன, மலையென்ன, காற்றென்ன, வானென்ன, அனைத்தும் தம் இயற்கை எழில் குன்றாது, பிறந்த மேனியோடு சிறந்து நின்று, இறைவனின் சிருஷ்டி விநோதத்தையே பசுமரத்தாணியறைந்தாற்போல அறிவுறுத்தி நிற்கும் அற்புதத் தனி மார்க்கம் என்றே அந்த யாத்திரா மார்க்கத்தைக் கூறுதல் வேண்டும்,

இயற்கை வளமோ!
இறைவனின்திருவருள்வளமோ!

ஆகா! அந்த நெடுஞ்சாலை! அதன் இருமருங்கும் பெரிய விருக்ஷங்கள் அடர்த்தியாய் வளர்த்து குளிர்ந்து நின்று. இறைவன் இறைவியரின் திருவருட் பெருநிழலை உபகரித்து நிற்கும் அதிசயத்தை என்னென்று வர்ணிப்போம். அந்த நெடுஞ்சாலையின் இரு புறத்திலுமுள்ள வயல்களிற் பசுமையான நெற்டயிர்கள் அந்தத் திருவருட் பெருமையையே நினைந்து நினைந்து இளந்தென்றலில் அசைந்து அசைந்து ஆடும் அருள் நடனத்தைத் தான் என்னென்று கூறுவோம். முதிர்ந்த கதிர்கள் கதிரின் பாரந் தாங்கமாட்டாமல் அம்மையப்பரின் திருவருட் சந்நிதி எங்கணுமிருக்கக்கண்டு. அந்த அருள் அதிர்ச்சியில் சாஷ்டாங்கமாக விழுந்து கிடக்கும் அற்புதம் தான் என்னே! ஆங்காங்கே தென்னந்தோப்புக்களும். மாந்தோப்புக்களும் வாழைத் தோட்டங்களும், கருமபுத் தோட்டங்களும் பச்சிளப் பருவத்து மலைக் குன்றுகள் போலவும் பேட்டு கிலங்கள் போலவும் நின்று, திருவருட் பெரும் வாரிதியில் மூழ்கி எழுந்து நிற்குப பூரிப்பை என்னென்று கூறுவது! அந்த அண்ணுமலை-காஞ்சிமாநகர் நெடுஞ்சாலையைப் பிடித்துச் செல்லும் யாத்திரீகர்களுக்கு பசியென்பதும் தாகமென்பதும் கிடையவே கிடையா, தாமரையும் செங்கழுநீரும் நிலோத்பலமும் அல்லியும் பூத்த எண்ணற்ற குளங்களும் தடாகங்களும் இறைவன இறைவியரின திருவருளைப் பூசிப்பதற்கும் அர்ச்சிப்பதற்கும் தகுந்த நேரத்தையும் காலத்தையும் எதிர் பார்த்துக்கொண்டிருக்கும அதிசயம் ஒருபக்கம். ஆறுகளும் சிறறுறுகளும், சின்னஞ்சிறு வாய்க்கால்களும் அவர்களின் திருப்பாதங்களை எப்பொழுது சென்று அடைவோம் என்ற ஏக்கத்துடன் வேகத்துடன் ஓடிக்கொண்டிருக்கும் விசித்திரம் இன்னொருபக்கம். மலர்களையும் பத்திரங்களையும் சுமந்து கொண்டு ஓடும் ஆறுகள் உண்மையாகவே இறைவன் இறைவியர்க்குப் பாத்யம் அர்க்கியம் ஆசமனியம் வழங்குவதற்கு நேரம் போய்விட்டதே என்ற வேகத்துடனேயே அந்த மார்க்கத்தில் ஓடிச் செல்கின்றன, இந்தச் திருவருட் பிரதேசத்தில் சும்மா உறங்கினாலே போதும் என்ற அமைதியுடன் கிடந்துறங்கும் கருங்கல், வெண்கற் பாறைகளின துணிவுதான் என்னே! அவற்றின் துணிவைப் பொருட்படுத்தாது, இருமருங்கும் உள்ள காட்டு மல்லிகைக் கொடிகள் மலர்களைப் பூத்து, தம் நறுமணத்தைப் பரப்பி திருவருட் பெருஞ் சேவை புரிந்து அல்லும் பகலும் ஈடுபட்டு நிற்கும் ஒப்பற்ற காட்சியையும் அந்த யாத்திரா மார்க்கத்தில் என்றாலும் காணலாம். (வளரும்)

## கட்டறுத்தெமை ... ...

1 ஆம் பக்க வளர்ச்சி

பொருட்டு திருப்பெருந்துறைக்கு சென்றபொழுது சிவபெருமான அவருக்கு திட்சை செய்து தம் அடியவன் ஆக்கினார். பக்தி சுவை நிறைந்த திருவாசக செய்யுட்களை ஓதினார் ஞானசாரியரின் கட்டளைப்படி தில்லையை அடைந்து புத்தரை வாதில் வென்று தவஞ் செய்து கொண்டு இருந்தார். சிவபெருமான் அவரிடத்திலே ஒரு பிராமண வடிவங் கொண்டு திருவாசகம், திருக்கோவையார் என்னும் திருமுறைகளை ஏட்டில் எழுதி கனகசபையின் கண்ணே சேமித்து வைத்தார். அத்திருவசசகத்திற்கு பொருள் கேட்க விரும்பினார்கள் திருவாதவூரடிகள் அவர்களை கனகசபைக்கு முன் அழைத்துச் சென்று அத்திருவாசகத்துக்குப் பொருள் தில்லை கூத்தனே என்று சுட்டுவிரலால் காட்டி சிவனோடு இரண்டறக் கலந்துவிட்டார். திருவாசகத்திற்கு வாச்சியம் சிவபெருமானே. இவ்வாறு திரு. அருள். தியாகராசா பேசும்போது குறிப்பிட்டார்.

யாழ். மத்திய கல்லூரி மாணவன் செல்வன் ருத்திரகுமாரன் 'திருவாசகம் என்னும் தேன்' என்னும் பொருளில் பேசினார்

முற்பகல் 9 மணியளவில் சிவஸ்ரீ. செ பாலசுப்பிரமணியக் குருக்கள் அவர்கள் சிவபூசை செய்தார்கள். நாவலர் மண்டபததில் திருவாதவூரடிகள் புராணம், திருவடிபெற்ற சருக்கம் படித்து பயன் சொல்லப் பட்டது. அன்னம் பாலிப்பும் நிகழ்ந்தது.

## பிரிவிடுதல் நொத்திஸ்

யாழ்ப்பாணம் மாவட்ட
நீதி மன்றத்தில்
இல. பீ / 1576,

வண்ணார்பண்ணை தென்கிழக்கு கன்னாதிட்டி வீதி பழனிச்சாமிச் செட்டியார் இராமநாதன்

எதிராக, - வழக்காளி

1, நாராயணசாமி இராசநாயகமும்
2. மனைவி கமலாவதியும் கன்னாதிட்டி வீதி வண்ணார்பண்ணை தென்கிழக்கு
3, தமையா ஆனந்தரட்ணமும்
4, மனைவி நதலாம்பிகையும், வட்டுக்கோட்டை மேற்கு
5, தம்பி ஜெயரததினமும்
6, மனைவி கமலாவும புது வீதி கொட்டடி யாழ்ப்பாணம
7. செல்லததுரை தங்கவடிவேலு வல்வெட்டித்துறை
8. பொன்னையா மயில்வாகனம் 115 காங்கேசன் துறை வீதி யாழ்ப்பாணம். - எதிராளிகள்

கிராமசேவகர் / பிஸ்கால் வடமாகாணம், யாழ்ப்பாணம்

வண்ணார்பண்ணை தென்கிழக்கு இறை வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று யாழ்ப்பாணப் பகுதி யாழப்பாணம டிஸ்திறிக் வடமாகாணம் தட்டான்தறை பரநிலை இலா. நாலு என்னும் ஆதனம் 1951ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற கட்டளைச் சட்டத்தற்கமைய மேற்படி கோட்டில் மேறபடி இலக்கத்தில் ஓர் பிரிவிடுதல வழக்குத் தொடர்ந்திருக்கிறதென்று இத்தாலுமக்கறிவிக்கப்பட்டிருக்கின்றது

மேற்படி வழக்கில் பிரதிவாதிகள் மேற்படி கோட்டில் 1975-ம் ஆண்டு ஆடி மீ 16 ம் 10மணிக்குசமுகமளிக்கும்படிகட்டளை பண்ணப்பட் டிருக்கிறார்கள்.

கோட்டாரின் கட்டளைப்படி

ஒப்பம்
பதிவாளர்
1975 ம் ஆ. ஆனி 11 ல
எம் 51 18

# கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழ இல: M. B. 10

முருகப்பர் வேலுப்பிள்ளை சங்கானை கிழங்கு — வழக்காளி

எதிராக

கிருஷ்ணர் கதிர்காமநாதர்; விக்ரோறியாக் கல்லூரியடி. சுழிபுரம் —எதிராளி

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் M. B. 10-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் துண்டுக் காணிகளை 1975ம் ஆண்டு 29-ம் திகதி (29-7-75) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10-00 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னல் விற்க்ப்படும்

## தீர்வைத் தொகை:

முதல் வட்டி ரூபா 5775/-ம் 5-2-74 தொடக்கம் 22-11-74 வரைக்கும் ரூபா 5000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 603-25

## ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானை கோவிற்பற்று சுழிபுரம் இறை "எண்டிராயன்" பரப்பு நெல் இலாச்சம் 14 பதினலு எல்லை கிழக்கு, வயிரமுத்து சுப்பையாவுக்குரிய காணி. வடக்கு ஆறுமுகம் இராமசாமிச்குரிய காணி, மேற்கு முருகேசர் விசாகப்பெருமாளுக்குரிய காணி, தெற்கு வாய்க்கால் இதடங்கலும்.

2 மேற்படி சுழிபுர மிறை "போற்றலாம்பிட்டி" மெய்யான தரவையும் எண்டிாயனும் பரப்பு நில இலாச்சம் 34 முப்பத்தி நாலும் பனைகள் வடலிகளும் எல்லை கிழக்கு ஆறுமுகம் சுப்பிரமணியத்துக்கும் பங்காளருக்கும் சரவணமுத்து பெண் வள்ளியம்மைக்குரிய காணிகள்: வடக்கு முருகேசு ஆறுமுகத்தினுரிமைக்காரருக்கும் பங்காளருக்கும், சரவணமுத்து பெண் தெய்வானைப்பிள்ளைக்குமுரிய காணிசள், மேற்கு மேற்படி தெய்வானைப்பிள்ளைக்குரிய காணி, தெற்கு கார்த்திகேசர் ஆசைப்பிள்ளைக்கும் கணபதியார் கோவிந்தரின் உரிமைக்காரருக்கும பெரியதம்பி சண்முகத்துக்கும் பங்காளருக்குமுரிய காணிகள், இவ்வெல்லைப்படி இதடங்கலும்.

க. சிவஸ்கந்தா

நாகேந்திரமடம் நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்
வட்டுக்கோட்டை, 26-6-75. 18-7-75 மதிப்பாளரும்.

# கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

இல, M B / 13185

1. வயித்திலிங்கம் செகராசசிங்கமும் பெண்
2. இராஜேஸ்வரியும் இருவரும் முள்ளானை இளவாலை

—வழக்காளிகள்

எதிராக

1. சின்னத்தம்பி குணசிங்கமும் பெண்
2. தங்கம்மாவும் இருவரும் சிறுவிழான் —எதிரிகள்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் M B / 13185 ஆம் இலக்க வழக்கில் எனக்தக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் துண்டுக் காணிகளை 1975-ம் ஆண்டு ஆகஸ்ட மாதம் 9-ஆம் திகதி (9—8—75) சனிக்கிழமை முற்பகல் 10-00 மணியளவில் அந்தக் காணிகளுள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 1933/-ம் 19-6-1972 தொடக்கம் 16-10-1973 வரைக்கும ரூபா 1000/.க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 415/15½.

## ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் மேற்குப் பகுதி பன்டத்தரிப்புக் கோயிற்பற்று சிறுவிழான் இறை. முள்ளானை நிலப்பரப்பு 3 1/4 அதற்குரியவைகளும் எல்லை கிழக்கு பொன்னம்பலம் செல்லத்துரைக்கும மறுபேருக்குமுரிய காணிகள், வடக்கு ஒழுங்கை முகப்பும் சிவக்கொழுந்து மயில்வாகனத்துக்கும் மறுபேருக்குமுரிய காணியும், மேற்கு இங்கேயுள்ள 2-ம் காணி, தெற்கு சிற்றம்பலம் நடராசாவின் காணி இதிற் சொரியலாய் ¼ பங்கும் வடக்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றி லிதற்குரிய பங்கும் வழிவாய்க்காற் பாவிப்பு நாலு முள அகலப் பாதையும்

பதிவு E $\frac{342}{210}$

2, ஷை சிறுவிளான் முள்ளானை நிலப்பரப்பு 3¼ செய்பயிர் கழும் இதற்கு எல்லை கிழக்கு மேலே கூறப்பட்ட 1ம் காணி வடக்கு சிவக்கொழுந்து மயில்வாகனத்திற்கும் பங்காளருக்குமுரிய காணி மேற்கு நாகலிங்கம் பெண் செல்லம்மாவின காணி தெற்கு சிற்றம்பலம் நடராசாவின் காணி இதில் சொரியலாய் அரைவாசியும் வடக்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றிலிதற்குரிய பங்கும் வழிவாய்க்கால் பாவிப்பும் பதிவு E 310/133.

3. ஷை சிறுவிளான் முள்ளானை நிலப்பரப்பு 6-ம் பனைகளும் இதற்கெல்லை கிழக்கு பொன்னம்பலம் செல்லத்துரையின் காணி வடக்கு சிவக்கொழுந்து மயில்வாகனத்துக்கும பங்காளருக்குமுரிய காணி மேற்கு ஒழுங்கை தெற்கு சிற்றம்பலம் நடராசாவின் காணி இதிற சொரியலால் 1/6 பங்கும். பதிவு E 308/122,

க. சிவஸ்கந்தா
நீதிமன்ற விற்பனை
ஆணையாளரும்
மதிப்பாளரும

நாகேந்திரமடம்
வட்டுககோட்டை
4-7-75
50 18.7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### THOUGHTS TO BE TREASURED

அகாரம் முதலாக ஐம்பத் தொன்றாகி
உகாரம் முதலாக ஓங்கி உதித்து
மகார இறுதியாய் மாய்ந்து மாய்ந்(து) ஏறி
நகார முதலாகும் நந்திதன் நாமமே.

There are 5I (letters) commencing with A (which is formed on opening the mouth). It develops into U and other letters and ends with M (on closing the lips).—(Thus is the Omkaram formed)—The Blessed Lord's name begins with N (Namasivaya).

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

திருச்சிற்றம்பலம்

Hindu Organ

FRIDAY, JULY 18, 1975

## SHUNTING IN SPACE

Shunning each other in *terra firma* the two Big Powers have for several decades constituted themselves as representatives of two separate ideals that challengingly strive to assert superiority. Poles apart in political vision, these two divergent interests always hold the threat of a third war not in self defence but in furtherance of the frivolous aim of leadership. However, intervening incidents that warningly deplore such selfish endeavours seem to have lessened the tempo of the expansionist enterprises creating a compulsory craving for alliances. But the 'get together' has not been effected in the real sense of practicability.

Now the surprising event of a shunting in space, ambitiously planned and enterprisingly executed by the U. S. S. R. and the U. S. A. must be applauded by every nation, big or small, as a prospective possibility of the science of space being scanned, studied and successfully utilized for the better living of man. Apollo-Soyuz formation up above in the mystic space by itself indicates that nation and nation can co-exist where all others cannot find access. The magnitude of this particular mission, the marvel of its layout and the magnificence of the performance all go to prove that the possibilities for more scientific progress are there to be explored in a spirit of selfless concern for mankind as a whole.

Hand shaking high up in indefinable space is almost a solemn undertaking, far from the maddening crowd of mischief makers of multi-purpose motives, which indicates that the performers of this peaceful mission would on their return to their own native lands ratify their personal act by resolutions of the Parliaments of their respective countries and assure the whole world that a new era of hope, harmony and happiness would soon replace the old order of cut-throat competition, conflict and chaos. If this hope can be achieved then the Apollo-Soyuz alliance will be acclaimed as the greatest event of all time.

## 'Slide Teaching' May Revolutionise Education

A revolution in education is in the offing with the development of an indigenous technology for the large-scale preparation of teaching aids by the Indian Registry of Pathology (IRP) in New Delhi.

Originally developed for teaching pathology in medical colleges, the development can be adapted for the teaching of any subject in schools and colleges it is said.

The IRP technology essentially consists in the presentation of teaching material in slides. IRP is now producing black and white and colour slides of autopsy specimens, whole disease organs, charts, formulae and tables as teaching material for medical students. Dr. S. S. Sriramachari, Director of the Registry said.

The impact on education of the 'slide technology' will be tremendous, it is said, because IRP's methods for mass producing colour transparencies at an extremely low cost is based on the ordinary Eastern cinematographic film.

So far slides have been made with conventional colour film like Kodachrome and Ektachrome at a cost of over Rs. 4 per slide. IRP slides cost less than 40 paise each.

"The use of cinematographic film for this purpose has ushered in a virtual technological revolution" Dr. Sriramachari said.

The National Council of Educational Research and Training (NCERT) have expressed interest in the IRP technology for making educational slides. What would take 15 minutes to draw on the blackboard can be shown in one slide, Dr. Sriramachari said.

Apart from saving teacher's time, 'Slide teaching' permits teachers to have eye-to-eye contact with students.

IRP has so far distributed 180 slides on pathology to 60 medical institutions in addition to 216 sets of 50 slides to leprosy organisations in the country. "Even students are placing orders", Dr. Chari said.

### Audio-Visual Slides

He said IRP's future plan is to produce 'self-educational' audio-visual material" by linking the slide with sound.

It took five years of basic research in optics physical chemistry and colour processing techniques before IRP could adapt cinematographic film for this work, Dr. Chari said.

The requirement of cinematographic film for educational purposes will be only a fraction of what is now imported by the film industry he said.

( To be continued )

## 4th July

( S. SIVASUBRAMANIAM
Member All Ceylon
Congress of Religions )

( Continued from last issue )

On the same day the Swamiji granted Dharshanam to devotees. The conversation touched upon many subjects. The following is a further extract:

Of Buddha, the Swami said that he was the greatest, greater than that ever lived. "Above all, he never claimed worship. Buddha said; 'Buddha is not a man, but a state. I have found the way. Enter all of you!'"

Mahatma Gandhi was to a great extent inspired by Swami Vivekananda, according to the Mahatma's opinion. Among the many remarkable statements by the Mahatma is the following:

"It must be the daily prayer of every adherent of the Hindu faith that every known religion of the world should grow from day to day and should serve the whole of humanity".

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்.

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday July 18, 1975

EDITOR-IN-CHIEF R. N. SIVAPIRAKASAM

## A Void that cannot be easily filled

A meeting to commemorate the late Prof. K. A. Nilakanta Sastri was held on the 7th inst., at the Jaffna Campus, Thirunelvely, under the joint auspices of the Jaffna Archaeological Society and the South Asian Studies Seminar. Prof. K. Indrapala presided. In his introductory remarks, he outlined the contributions of Prof. K. A. Nilakanta Sastri to the various fields of study like South Indian History, epigraphy, archaeology, historical sources and South Indian influence in South East Asia and said that the death of Sastri has created a void in the historical research of South India. Mr. V. Sivasamy assessed the importance of the historical writings of Prof. Sastri especially, on the history of Tamilnad. Mr. A. Sivanesaselvam stressed the significance of the contributions of Sastri to Tamil studies, especially, Tamil literature. All the speakers referred to the scientific attitude of Prof. Sastri in the writing of South Indian history which won him international recognition.

## NOTICE

IN THE DISTRICT COURT OF POINT PEDRO

No 12435

Vallipuram Thuraisingham of Puloly West

Vs. Plaintiff

1 Theivanaipillai widow of Velappar Vallipuram
2 Kandiah Thiyagarajah of Thunnalai North
3 Neelakuddy Kathirgamathamby of Thunnalai South

Defendants

It is hereby notified that action No. 12435 has been instituted in the District Court of Point Pedro under the Partition Act No. 16 of 1951 for the partition / sale of the land called Chalampai in extent 23 3/8 Lms V C and situated at Puloly West Venripakuthevan Kurichchy in the Parish of Point Pedro.

The defendants in the aforesaid action are summoned to appear in Court on the 5th day of August 1975 at 9 O'clock of the forenoon.

By order of Court
A. Thavarajah
for Secretary/Chief Clerk
This 9th day of July 1975
10 18-7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org